பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி - சென்னை - 4
18 10 2025 SATURDAY 6 45 AM
வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. உலக நாடுகள் இந்தியாவை நம்பகமான மற்றும் பொறுப்புள்ள நாடாக கருதும் நிலை உருவாகியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. வர்த்கம் இல்லாமல் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியாது என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. தீபாவளிக்காக சொந்த ஊர்களுக்கு செல்லும் பொதுமக்கள் வசதிக்காக போதுமான அளவு பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு வரும் 21ஆம் தேதியை விடுமுறையாக மாநில அரசு அறிவித்துள்ளது.

5. Denmark ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>>><<<<<<<<

உலக நாடுகள் இந்தியாவை நம்பகமான மற்றும் பொறுப்புள்ள நாடாக கருதும் நிலை உருவாகியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று ஊடக நிறுவனம் ஒன்று ஏற்பாடு செய்திருந்த உலக உச்சிமாநாட்டில் பேசிய அவர், மின்னணுவியல் முதல் மருந்துகள் வரையும், ஆட்டோமொபைல் முதல் மொபைல் உற்பத்தி வரையும் இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்கள் தொடர்ந்து அதிக அளவில் முதலீடுகளை செய்து வருவதாக தெரிவித்தார்.

இத்தகைய முதலீடுகள் உலக அளவில் இந்தியாவை வலுவான விநியோக மையமாக மாற்ற உதவுவதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவின் இன்றைய வளர்ச்சி உலகளாவிய வாய்ப்புகளை உருவாக்கித் தருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளுடன் செய்யப்பட்டுள்ள தாராள வர்த்தக ஒப்பந்தம் காரணமாக, அந்நாடுகள் இந்தியாவில் 100 பில்லியன் டாலர் மதிப்புள்ள முதலீடுகளை செய்துள்ளதாகவும், இது மிகப் பெரிய அளவிலான வேலைவாய்ப்பை ஏற்படுத்த வழிவகுக்கும் என்றும் பிரதமர் கூறினார்.

>>>>>>>><<<<<<<<

வர்த்கம் இல்லாமல் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியாது என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

லக்னோவில் நேற்று சுயசார்பு இந்தியா பிரச்சாரத்தின் கீழ். பிஜேபி ஏற்பாடு செய்திருந்த வர்த்தக சங்கங்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் பேசிய அவர், தீபாவளி மற்றும் Dhanteras பண்டிகையின் போது, பொதுமக்கள் அனைவரும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களை வாங்கி சுதேசி பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

வர்த்தக சங்கங்கள் வருடத்திற்கு ஒருமுறை ஒன்று கூடி, பிரச்சினைகளை கூட்டாக விவாதித்து, தீர்வு காண வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஒருங்கிணைந்த முயற்சிகள் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்றும் திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

>>>>>>>><<<<<<<<

*நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் சாலையோர வியாபாரிகள் அதிகாரிகளால் துன்புறுத்தப்படுவது மற்றும் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவது குறித்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு, தேசிய மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.*

*இதுதொடர்பாக, வியாபாரிகள் அளித்த புகாரை பதிவு செய்துகொண்ட ஆணையம், இதுகுறித்து விளக்கமளிக்குமாறு மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை கேட்டுக் கொண்டுள்ளது.*

*ஆக்கிரமிப்பு என்ற பெயரில் சாலையோரம் பெட்டிக்கடை மற்றும் சிறுவியாபாரம் செய்வோர், உள்ளாட்சித்துறை அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அபராதம் விதிக்கப்படுவதாகவும், முன்னறிவிப்பின்றி கடைகள் அகற்றப்படுவதாகவும் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தில் புகார் செய்யப்பட்டது.*

*இந்த புகார்கள் மீது விசாரணை நடத்துவதற்கு முன்பு குற்றச்சாட்டுகள் குறித்து மாநில அரசுகளின் பதிலை ஆணையம் கோரியுள்ளது.*

>>>>>>>><<<<<<<<

*தீபாவளிக்காக சொந்த ஊர்களுக்கு செல்லும் பொதுமக்கள் வசதிக்காக போதுமான அளவு பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.*

*சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் நேற்று தீபாவளி சிறப்பு பேருந்து இயக்கத்தை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*போக்குவரத்து நெரிசலை தவிர்க்க மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் கூறினார்.*

*பின்னர், கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் பேருந்துகள் இயக்கப்படுவதை ஆய்வு செய்த திரு. சிவசங்கர், கூடுதல் மற்றும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுவதால் பொதுமக்கள் சிரமமின்றி தங்களது ஊர்களுக்கு பயணம் செய்து வருவதாக தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – சிவசங்கர் 35 செகண்ட்ஸ்)*

>>>>>>>><<<<<<<<

*தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு வரும் 21ஆம் தேதி விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.*

*அந்த விடுமுறை தினத்தை ஈடு செய்யும் வகையில், இம்மாதம் 25ஆம் தேதி பணிநாளாக இருக்கும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

>>>>>>>><<<<<<<<

*தீபாவளியை முன்னிட்டு, கோவை, சேலம், திருப்பூர் மாவட்டங்களில் பணிபுரியும் வெளியூர் மக்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வதால், ரயில் மற்றும் பேருந்து நிலைங்களில் கூட்டம் அதிகரித்து காணப்படுகிறது.*

*சேலம் ரயில் நிலையத்தில் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்தும் வகையில், ரயில்வே பாதுகாப்புப் படையினர் மற்றும் ரயில்வே காவல்துறையினர் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளதாக காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.*

*(சவுண்ட் பைட் – ஆய்வாளர் முருகன் 25 செகண்ட்ஸ்)*

*இந்நிலையில், திருநெல்வேலி ரயில் நிலையத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, ரயில்வே பாதுகாப்புப் படையினர் பயணிகளின் உடமைகளை பரிசோதித்து அனுப்புகின்றனர்.*

*ரயில்களில் பட்டாசு கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதால், அதுகுறித்தும் பொதுமக்களுக்கு காவல்துறையினர் விழிப்புணர்வும் ஏற்படுத்தி வருகின்றனர்.*

>>>>>>>><<<<<<<<

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில பகுதிகளில் இன்று இடியுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, சேலம், நாமக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றும், இன்று அதிகாலையும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்துள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலையை ஓட்டியுள்ள பல மாவட்டங்களில் கனமழை பெய்துள்ளது.

கனமழையைத் தொடர்ந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால், குற்றாலம் பிரதான அருவி மற்றும் பழைய குற்றால அருவிகளில் பொதுமக்கள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில், தக்கலை, குலசேகரம், பேச்சிப்பாறை உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முழுவதும் கனமழை தொடர்ந்ததால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

இந்த மழை காரணமாக, தீபாவளிக்கு பொருட்கள் வாங்க முடியாமல் பொதுமக்கள் சிரமப்பட்டதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கிறார்.

தொடர்ச்சியாக பெய்த மழையால் கன்னியாகுமரி மாவட்டத்தின் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி உள்ளிட்ட முக்கிய அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

>>>>>>>><<<<<<<<

இருவரிச் செய்திகள்

இஸ்ரேலைச் சேர்ந்த பிணைக் கைதி ஒருவரின் சடலத்தை ஹமாஸ் அமைப்பினர் நேற்று சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைத்தது.

>>>>>>>><<<<<<<<

மொசாம்பிக் நாட்டில் படகு கவிழ்ந்ததில் 3 இந்தியர்கள் உயிரிழந்தனர்,

>>>>>>>><<<<<<<<

ஆப்கானிஸ்தானில் நேற்று லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 5 புள்ளி ஐந்தாக பதிவானது.

>>>>>>>><<<<<<<<

சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில், மிஸோரமில் திட்டமிட்ட நகரம் ஒன்றை உருவாக்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

>>>>>>>><<<<<<<<

சித்தா மற்றும் யுனானி பட்ட மேற்படிப்புக்கான மாணவர் சேர்க்கை குறித்த அறிவிப்பை இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆணையரகம் வெளியிட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வாயிலாக உயர்கல்வித்துறைக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை மாநில அமைச்சர் திரு. கோவி செழியன் நேற்று வழங்கினார்.

>>>>>>>><<<<<<<<

ராமேஸ்வரத்திலிருந்து திருவனந்தபுரம் வரை இயக்கப்படும் அமிர்தா விரைவு ரயில் சேவை நேற்று தொடங்கியது.

>>>>>>>><<<<<<<<

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் இலவச போட்டித் தேர்வு பயிற்சி மையத்தை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

*>>>>>>>><<<<<<<<<*

சென்னை தாம்பரத்தில் உள்ள சிறப்பு பொருளாதார மண்டலம் மற்றும் சீடாக் இணைந்து புதிய தொழில்நுட்பத் திறன் மையத்தை திறந்துள்ளன.

*>>>>>>>><<<<<<<<<*

விளையாட்டுச் செய்திகள்

*Denmark* ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் இந்த இணை *21-15, 18-21, 21-16* என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் முஹமத் ரியான் – ரஹமத் இதாயத் இணையை வென்றது.

இன்று நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் இந்திய இணை, ஜப்பானின் *Takuro Hoki – Yugo Kobayashi* இணையை எதிர்கொள்கிறது.

அதேநேரத்தில், ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் லக்ஷ்யா சென், பிரான்ஸ வீரரிடம் வெற்றிவாய்ப்பை இழந்தார்.

*>>>>>>>>END<<<<<<<<<*